| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை - 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 101888 / எப் 1/2021** **நாள் : 04.08.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு, அக்டோபர் 2022 – பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கக் கோருதல் – பத்திரிக்கைச் செய்தி வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

******

நடைபெறவுள்ள அக்டோபர் 2022 தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்விற்கு மேல்நிலை முதலாமாண்டு (+1) பயிலும் பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் பொருட்டு அதன் தொடர்பான செய்தி அறிவிக்கை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பொதுமக்களும், மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடவும், வானொலி/தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

"இது விளம்பரம் அல்ல" எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**<u>இணைப்பு:</u>** செய்திக் குறிப்பு

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6</u>**

**<u>தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு, அக்டோபர் - 2022</u>**

**<u>செய்திக்குறிப்பு</u>**

பள்ளி மாணவ, மாணவியர்களின் அறிவியல், கணிதம், சார்ந்த ஒலிம்பியாய்டு தேர்வுகளுக்கு பெருமளவில் தயாராகி பங்கு பெறுவதைப் போன்று தமிழ் மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு நடத்தப்படவுள்ளது. இத்தேர்வில் 1500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை வழியாக மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

தமிழ்நாடு அரசின் 10-ஆம் வகுப்பு தர நிலையில் உள்ள தமிழ் பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் தேர்வு நடத்தப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத் தலைநகரங்களில் இத்தேர்வு நடத்தப்படும்.

2022-2023-ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் (CBSE / ICSE / உட்பட) பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள், 01.10.2022 (**சனிக்கிழமை) அன்று** நடைபெறவுள்ள இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்விற்கு மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியின் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க இயலும். எனவே, மாணவர்கள் இத்தேர்விற்கான விண்ணப்பங்களை <u>www.dge.tn.gov.in</u> என்ற இணையதளம் மூலம் **<u>22.08.2022 முதல் 09.09.2022 வரை</u>**

பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத் தொகை ரூ.50/- சேர்த்து சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். 09.09.2022.

**ஒம்**/-

**இயக்குநர்**

**சென்னை** – 600 006

**நாள்**: 04 .08.2022